இருக்கிற விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, முல்லையாறு குறுக்கே அணைக் கட்டி, அந்த அணையின் வாயிலாகக் குடிநீர் வழங்கலாம் என்ற யோசனையையும் தெரிவித்திருக்கிறார்கள். ஒன்றைமட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு பேச்சிப்பாறை அணையிலிருந்து, நாகர்கோயில் மக்களுக்குக் குடிநீர் எடுக்கிற போது, எந்தவித பாதிப்பும் அங்கிருக்கிற விவசாயிகளுக்கு ஏற்படப் போவதில்லை. ஏதோ ஒரு மாயையின் அடிப்படையிலே அல்ல, நல்ல நோக்கத்தோடுதான் அந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறோம். எந்த ஒரு திட்டம் போட்டாலும், இன்றைக்கு வீராணம் திட்டம் போட்டிருக்கிறோம், அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத வகையிலே தான், ஏரிகளை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி இன்றைக்கு அந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறோம் அந்த அடிப்படையிலேதான், ஒரு தொலைநோக்குப் பார்வையோடு ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். அப்படி உண்மையிலேயே பாதிப்பு ஏற்படுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால், மீண்டும் அதை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, பாதிப்பு இல்லாதவகையிலே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும். அதே சமயத்தில் இன்றைக்கு முல்லையாறு நதிநீரின் குறுக்கே அணையைக் கட்ட வேண்டுமென்று சொன்னால், எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்கு 'டெக்னிகல் சாங்ஷன்' பெற வேண்டும். அந்தத் திட்டத்தைத் தீட்ட வேண்டும். அணையைக் கட்டி, அதற்குப் பிறகு குடிநீர் வழங்குவது என்ற இரண்டுத் திட்டத்தையும் ஒன்றாக உருவாக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு, நாகர்கோயில் நகர மக்களுக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு ஏற்படுத்துவதற்கு, இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆணையின் பேரிலே, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

(ஆ) கோவை மாவட்டம் பேரூர் நாகராஜபுரத்தில் தாட்கோ வீடுகள் இடியும் நிலையிலுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. பி. ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, நாகராஜபுரத்தில் தாட்கோ மூலமாக கட்டப்பட்டுள்ள வீடுகள்

பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஆதி திராவிடர்களுக்கு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 1974 முதல் 1979 வரை வீடுகள் இலவசமாகக் கட்டி வழங்கப்பட்டு வந்தன. பின்னர் கிராமப்புறக் கூட்டுறவு வீட்டு வசதி திட்டத்தைப் பின்பற்றி வீடு கட்டுவதற்கான தொகை இக்கழகத்தின் மூலம் மான்யமாக வழங்கப்பட்டு பயனாளிகளே ஓட்டு வீடுகளைக் கட்டிக் கொள்ளும் வகையில் திட்டம் 1980 முதல் 1987 வரை செயல்படுத்தப்பட்டது. 1988-89 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் இலவச வீட்டு வசதித் திட்டம் என்னும் புதிய சிறப்பு திட்டத்தின் கீழ் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் தாட்கோ மூலம் மீண்டும் வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவை (R.C.C.) கூரையுடன் தீப்பிடிக்காத வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. 1975-ல் கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி நாகராஜபுரம் கிராமத்தில் வீடு ஒன்றுக்கு ரூ. 4,000 வீதம் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகத்தால் 76 வீடுகள் கட்டப்பட்டன. பயனாளிகள் அவர்களது வீடுகளைப் பராமரிக்காததன் விளைவாக 56 வீடுகளின் சுவர்களில் விரிசலும், கூரையில் கசிவும் ஏற்பட்டுள்ளன. 20 வீடுகள் நல்ல நிலையில் உள்ளன.

3. 1989-ஆம் ஆண்டு முதல் உறுதி செய்யப்பட்ட கான்கிரீட் வீடுகளை ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கான்கிரீட் வீடுகள் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய/மாநில நிதியைக் கொண்டு ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கட்டப்படுகின்றன. மத்திய அரசின் அறிவுரைகளுக்கிணங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகள் தங்களது சொந்தச் செலவில் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும்படியும் இது குறித்து அவர்களுக்கு தெளிவுபட எடுத்துக் கூறி வீடுகளை அவர்களுக்கு ஒப்படைக்கும்போதே உடன்பாட்டுப் பத்திரமொன்றில் பயனாளிகளின் இசைவைப் பெற வேண்டுமென்றும் அரசு ஏற்கனவே

ஆணை பிறப்பித்துள்ளது. இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதோடு அவ்வீடுகளைப் பழுது பார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் மேலும் அரசு கூடுதல் செலவு செய்து கொண்டிருந்தால் புதிதாக வீடு கட்டிக் கொடுக்கப் போதிய நிதி வசதி இல்லாமல் போய்விடும் என்பதும் முக்கியமாகக் கருதப் படுகிறது.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை பார்த்தேன். படித்தேன். அந்த விவர அறிக்கையில் தாட்கோ மூலமாக கட்டிய வீடுகள் பழுதடைந்துவிட்டால், அதைப் பழுது பார்ப்பதற்கு சாத்தியம் இல்லையென்ற அளவிற்கு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தாட்கோ மூலமாக 1975-ஆம் ஆண்டு முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப்பட்ட வீடுகள். நாங்கள் அந்த வீடுகளுக்கு மனு சேகரிப்பதற்கு சென்ற போது கூரைகளைக் காண்பித்தார்கள். அதிலே இருக்கின்ற ஆதி திராவிட மக்கள் யாரும் இரவிலே வீடுகளுக்குள் படுப்பது கிடையாது. வெளியே தான் படுத்து உறங்குகிறார்கள். அதற்குக் காரணம் வீடுகள் எப்பொழுது இடிந்து தலையில் விழுமோ என்ற அபாயம் அவர்களைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அரசு பல ஆதி திராவிட மக்களுக்கு நலத் திட்டத்தின் கீழ் பல அருமையான வீடுகளை, இப்போது வலுவான வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இடிந்து விழக்கூடிய நிலையிலே இருக்கின்ற அந்த வீடுகளையும் பழுதுபார்க்க அரசு முன்வருமா என்பதை உங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதியில் நாகராஜபுரத்தில் கட்டப்பட்ட வீடுகள் கட்டி 20 ஆண்டு காலம் ஆகிறது. இந்த வீட்டினுடைய அப்போதைய மதிப்பு ரூ. 4,000. ஆனால் இன்றைக்கு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் சமவெளியில் கட்டப்படக்கூடிய ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 19,200, மலைப் பகுதிகளில் ரூ. 21,000 என்று மதிப்பிட்டு கட்டிக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அப்படி இந்த மூன்று ஆண்டு காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் 58,935 வீடுகள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்து நியாயமானக் கருத்தாகத்தான் தோன்றுகிறது. நான்கு ஆயிரம் ரூபாய் செலவில் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அந்த வீடுகள், என்னோடு பேசுகிறபோது சொன்னார்கள் உண்மையிலேயே மோசமான நிலையிலே இருக்கின்றன என்று. அந்த ஏழை எளிய மக்கள் கஷ்டப்படுகின்றதையெல்லாம் உணர்வுப் பூர்வமாக உணர்ந்த காரணத்தினால், நம்முடைய முதல் அமைச்சர் காலத்திலே இவற்றை சீர்செய்து கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அதை சீர் செய்து கொடுப்பது

என்றால் இன்றைக்கு நம்முடைய பொருளாதாரத்தில் புதிய வீடுகள் கட்டுவது தடைபடும் என்ற காரணத்தினால், அதைக் கட்டுவதற்கு இயலாது என்று நான் சொன்னாலும்கூட சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் அவர்கள் சிறப்பு நேர்வாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைப்பார்களேயானால், அதை இந்த அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு பல்வேறு ஆண்டுகளில் பல்வேறு வீடுகளை புரட்சித் தலைவி அவர்கள் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில், ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக அந்த மேற்கண்ட வீடுகளைப் பழுது பார்ப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன். காரணம் என்னவென்று கேட்டால், ஒவ்வொரு ஊராட்சிக்கும் 50 வீடுகள், 100 வீடுகள் என்று மாவட்ட வாரியாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பிரித்து ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் ஆர். சி. சி. போட்ட வீடுகள் சுமார் 20 ஆயிரம், 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள வீடுகளாகக் கட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, அதில் ஒரு பகுதியை குறைந்தாவது இந்த வீடுகளை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக பழுதுபார்த்து அங்கே குடியிருக்கின்ற ஆதி திராவிட மக்கள் வெளியே உறங்காமல் மீண்டும் உள்ளே சென்று படுத்து உறங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதி, நாகராஜபுரத்தில் 36 வீடுகள் பழுதடைந்து மிக மோசமான நிலையில் இருப்பதாக எனக்குக் குறிப்புகள் தந்திருக்கிறார்கள். அந்த வீடுகளைச் சிறப்பு நேர்வாக, தமிழ்நாடு முழுவதும் என்று சொல்வதற்கு இயலாது, அந்த மக்களுடைய கஷ்டங்களை, அந்த மக்கள் வெளியிலே படுத்துத் தூங்கக்கூடிய அவலமான நிலையைக் கருதி, அதனை ஒரு கோரிக்கையாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் சிறப்பு நேர்வாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கொடுத்தால் நிச்சயமாக, அதை அவர்கள் பரிசீலிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS